ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 26 ]
Total No. of Questions : 26 ]

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 4
[ Total No. of Printed Pages : 4

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 312-T (RS)**

**Code No. : 312-T (RS)**

# ಕಲಿಕೆಯನು–ಅನುಕೂಲಿಸುವುದು (ಕಿ.ಪ್ರಾ.ಶಾ.)

# ಪ್ರಥಮ ಭಾಷೆ – ತಮಿಳು

# FACILITATING LEARNING ( LPS )

# FIRST LANGUAGE — TAMIL

**(ಪರಿಷ್ಕೃತ ಪಠ್ಯವಸ್ತು)**
**(Revised Syllabus)**

ದಿನಾಂಕ : 07. 06. 2017 ]

Date : 07. 06. 2017 ]

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10.00 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–1.00 ರವರೆಗೆ ] [ ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 60

Time : 10.00 A.M. to 1.00 P.M. ] [ Max. Marks : 60

*ಅಭ್ಯರ್ಥಿಯ ನೋಂದಣಿ ಸಂಖ್ಯೆ*
*Register Number of the Candidate*

***குறிப்பு :***

i) இது 60 மதிப்பெண்களின் வினாத்தாள்

ii) ஒவ்வொரு வினாவிற்கும் சிந்தித்து பதில் அளிக்க வேண்டும். இதற்காக 3 மணி நேரங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையளிக்கவும்.

**PART – I**

I. இப்பகுதியில் மொத்தம் 10 வினாக்கள் இருக்கின்றன. **எல்லா** வினாக்களுக்கும் பதிலளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அதில் ஏதாவது ஒரு விடை சரியானதாக இருக்கும். அதைத் தேர்ந்தெடுத்து எழுதவும் :

$10 \times 1 = 10$

1. தன்னடக்கம் குழந்தைகளுக்கு உதவியாக இருப்பது : ................................ .

(அ) புரிந்து கொள்ளும் அளவிற்கு

(ஆ) பொறுமையுடன் கற்பது

(இ) எல்லாக் குழந்தைகளுக்கும் ஏற்றது.

2. கேட்டல் முறை நடைபெறும் விதம் : ................................ .

(அ) பெற்றோர்களிடம் பேசும் போது

(ஆ) ஆசிரியர் பாடம் நடத்தும்போது

(இ) நண்பர்களிடம் விளையாடும்போது.

3. கதை சொல்வதால் உண்டாகும் நன்மை : ................................ .

(அ) மகிழ்ச்சியை உண்டாக்குதல்

(ஆ) பொழுதுபோக்கிற்கு

(இ) உற்சாகப்படுத்துதல்.

4. கிராமிய விளையாட்டுக்களின் மூலம் ................................ .

(அ) உடல் வ வு பெறும்

(ஆ) உடல் மெ வு பெறும்

(இ) உடல் மிளிரும்.

5. படிப்பில் மந்தமான குழந்தைகளுக்கு ஆசிரியர் மேற்கொள்ளும் முறை : ................................ .

(அ) கவனிப்பு இல்லாமை

(ஆ) தனிக்கவனம் செலுத்துதல்

(இ) பள்ளியை விட்டு நீக்குதல்.

6. குழந்தைகள் பள்ளிக்கு வந்தவுடன் : ................................ .

(அ) பாடத்தை

(ஆ) எழுத்தை

(இ) விளையாட்டை.

7. காது கேளாத குழந்தைகளுக்கு : ................................

(அ) கதை சொல்வது

(ஆ) ஆசிரியர் உரக்கப் படிப்பது

(இ) படத்தைக் காண்பித்து விளக்குவது.

8. குழந்தைகள் பள்ளியில் கற்றுக் கொள்வது : ................................ .

(அ) விளையாட்டு

(ஆ) எழுதுதல் மற்றும் படித்தல்

(இ) பாடுதல்.

9. குழந்தைகளுக்கு பிடித்த பாடல் : ................................ .

(அ) செய்யுள் பாட்டு

(ஆ) தாலாட்டு பாட்டு

(இ) விளையாட்டுப் பாட்டு.

10. குழந்தைகளுக்கு வீட்டு வேலை அதிகம் கொடுப்பதால் ............................... அடைவார்கள்.

(அ) மகிழ்ச்சி

(ஆ) சோர்வு

(இ) விளையாட்டு.

## PART – II

II. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக : 5 × 2 = 10

11. முதன் முதலாக பள்ளிக்கு வரும் குழந்தைகளிடம் ஆசிரியர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் ?

12. வகுப்பறையின் வெளியில் மற்றும் உள்ளே பேசப்படும் மொழிகளின் அவசியத்தை எழுதுக.

13. நாடகம் நடத்தும் முறை எவ்வாறு ?

14. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் மேல் கொண்டுள்ள குறைகள் யாவை ?

15. விளையாட்டின் விதிமுறைகள் யாவை ?

16. காது கேளாத குழந்தைகளுக்கு எவ்வாறு பாடம் நடத்துவீர் ?

17. பேசுதல் எவ்வாறு நடைபெறுகிறது ?

18. சிவராம் காரந் கண்டறிந்த கல்வி முறை யாது ?

## PART – III

III. எவையேனும் **எட்டு** வினாக்களுக்கு மட்டும் விடை தருக : 8 × 5 = 40

19. அ) மொழி பயிற்றும் முறையில் மொழியின் அவசியம் எவ்வாறு ?

*அல்லது*

ஆ) மொழி பயிற்று முறையில் இலக்கியத்தின் பங்கு எவ்வாறு ?

20. அ) கன்னட எழுத்தாளர் கே.வி. சுப்பண்ண அவர்கள் கல்வி முறையைப் பற்றி சொல்லும் விளக்கம் என்ன ?

*அல்லது*

ஆ) குழந்தையைப் படிப்பில் ஊக்குவிக்க எம்முறையைப் பின்பற்றுவீர் ?

21. அ) படித்த ன் நோக்கங்கள் எத்தனை வகைப்படும் ? விளக்குக.

*அல்லது*

ஆ) படித்தல் என்றால் என்ன ? அதை எம்முறையில் பின்பற்றுவீர் ?

22. அ) குழந்தைகளுக்கு கிராமிய விளையாட்டுக்களை அறிமுகப்படுத்துவதில் உள்ள நன்மைகள் யாவை ?

*அல்லது*

ஆ) மொழி பயிற்றும் முறையில் வீட்டில் பேசப்படும் பேச்சிற்கும், பள்ளியில் பேசப்படும் பேச்சிற்கும் வேறுபாடு அதிகமில்லை. எவ்வாறு ?

23. அ) குழந்தைகளிடம் ஒரு வாக்கியத்தைக் கொடுத்து எவ்வாறு தேர்வு நடத்துவீர் ?

*அல்லது*

ஆ) மக்களிடையே பேசப்படும் மொழிகளின் விளக்கம் தருக.

24. அ) விளையாட்டு மற்றும் படிப்பு ஆகியவற்றிற்குள்ள ஒற்றுமைகள் யாவை ?

*அல்லது*

ஆ) தொடக்கப் பள்ளிகளில் ஆட்டம் மற்றும் வாய் மொழிப் பயிற்சி ஆகியவற்றில் உள்ள வேறுபாடுகள் யாவை ?

25. அ) குழந்தைகள் எழுதுவதற்கு முன் ஆசிரியர் மேற்கொள்ள வேண்டிய முறை யாது ?

*அல்லது*

ஆ) குழந்தைகளின் எழுத்துப் பிழையை எவ்வாறு போக்குவீர் ?

26. அ) ஆசிரியரின் குணங்கள் எவ்வாறு அமைய வேண்டும் ?

*அல்லது*

ஆ) கற்போம் - மகிழ்வோம் என்ற பயிற்சியின் விதிமுறைகள் யாவை ?